ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

# முதலாயிரம்

# பெரியாழ்வார் திருமொழி

## தனியன்கள்

குரு முகமநதீத்ய ப்ராஹவேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாதாதுகாம:-
ஸ்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகந்தம் விஷ்ணுசித்தம் நமாமி

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றுஒருகால் *
சொன்னார் கழற்கமலம் சூடினோம் *- முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம் * கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தனென்று *
ஈண்டிய சங்கமெடுத்தூத *- வேண்டிய
வேதங்களோதி விரைந்துகிழியறுத்தான் *
பாதங்கள்யாமுடையபற்று.